பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 14 வியாழக்கிழமை 31.10.2024 | அதிர்வு 91

முன்னாள் இராஜாங்க அமைச்சர்

## லொஹான் ரத்வத்த கண்டியில் கைது!



முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த கண்டி பிரதேசத்தில்

02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்






காற்றில் பறக்கும் வாக்குறுதிகள்

# அநுர அரசு குத்துக்கரணம்

## யாழில் சுமந்திரன் விளாசல்

CLICK HERE VIDEO

(எஸ்.நிதர்ஷன்)

“நாட்டு மக்களுக்கு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியால் கொடுத்த வாக்குறுதிகள் ஒன்றன் பின் ஒன்றாக இப்போது சறுக்கத் தொடங்கியிருக்கின்றன. பதவிக்கு வந்த பின்னர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு குத்துக்கரணம் அடிக்கின்றார்.”

02 ▶

# தமிழ்த் தரப்பைப் புறந்தள்ளி அரசை அமைக்கவே முடியாது!

## ஜே.வி.பியைச் சாடி செல்வம் அடைக்கலநாதன் கருத்து




(கி.வசந்தன்)

“இடதுசாரித்துவத்தை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி இன்று சிங்கள தேசிய வாதத்தோடு இணைந்து செயற்படுகின்றது. இம்முறை தமிழ்த் தரப்பைப் புறந்தள்ளி புதிய அரசை அமைக்க முடியாது.”

– இவ்வாறு ரெலோவின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

02 ▶

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## அநுர அரசு...

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் வாக்குறுதிகளிலே தமிழ் மக்கள் சம்பந்தமான வாக்குறுதிகளில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்றாக நீக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதிலும் இந்த விடயம் தேர்தல் கால வாக்குறுதி மட்டுமல்லாமல் தொடர்ச்சியாகத் தங்களுடைய நிலைப்பாடாகத் தேசிய மக்கள் சக்தி வைத்திருந்தது.

இவ்வாறு தொடர்ச்சியான தெளிவான நிலைப்பாடாக இருந்த ஒரு விடயத்தை இப்போது ஆட்சிக்கு வந்த உடனே அந்தச் சட்டத்தை நீக்க வேண்டிய அவசியமில்லை என்றும், அதை துஷ்பிரயோகம் செய்யாமல் இருந்தால் மட்டும் போதும் என்றும் தேசிய மக்கள் சக்தியினர் சொல்லுகின்றனர்.

இவ்வாறான நிலைப்பாடுகள் என்பது புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அநுர அரசின் ஒரு குத்துக்கரணம் ஆகும். ஏனெனில் தாங்களாக நீண்டகாலமாக எடுத்திருந்த ஒரு நிலைப்பாட்டைப் பதவிக்கு வந்த பின்னர் மாற்றுவது உண்மையில் அதுவொரு குத்துக்கரணம்தான்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தால் மிகவும் மோசமாகத் தமிழ் மக்களே பாதிக்கப்பட்டு இருக்கின்றனர். அதேநேரம் அந்தச் சட்டத்தால் ஜே.வி.பியினரும் ஓரளவுக்குப் பாதிக்கப்பட்டவர்கள்தான். இதேபோன்று ஈஸ்டர் தாக்குதல் காலத்தில் முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டனர். ஆனாலும், பெரும்பாலும் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள்தான்.

ஆனால், ஓரளவுக்காவது பாதிக்கப்பட்ட ஒரு குழுவினராக இருக்கின்ற ஜே.வி.பியினர் இப்போது திடீரென்று அதை நாங்கள் துஷ்பிரயோகம் செய்யாமல் விட்டால் போதும் என்று சொல்லுவது முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒரு கருத்து.

அவர்களது இந்தக் கருத்து நிலைப்பாடு எதனைச் சுட்டிக்காட்டுகின்றது என்றால் அவர்கள் ஏற்கனவே மக்கள் மத்தியில் சொன்ன கருத்துக்கள் அல்லது வாக்குறுதிகள் ஒன்றன்பின் ஒன்றாக காற்றில் பறக்க விடப்படப் போகின்றன என்பதற்கு முதல் அறிகுறியாக இது அமைகின்றது.” – என்றார்.

## லொஹான் ரத்வத்த...

வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

லொஹான் ரத்வத்தவின் மனைவி ஷஷி பிரபா ரத்வத்தவுக்குச் சொந்தமான நுகேகொடை, மிரிஹான பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து பதிவு செய்யப்பட்ட இலக்கத்தகடு இல்லாத சொகுசு கார் ஒன்று கடந்த 26 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இதன்போது, லொஹான் ரத்வத்தவும் அவரது மனைவியும் இது தொடர்பில் பொலிஸாரிடம் தெரிவிக்கையில்,

“கடந்த சில வாரங்களுக்கு முன்னர்



கண்டி, கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட லொஹான் ரத்வத்தவின் பிரத்தியேகச் செயலாளர் இந்தக் காரை வீட்டின் கராஜில் நிறுத்தி வைத்தார்.” – என்று தெரிவித்துள்ளனர்.

பின்னர், இந்தக் காரானது மேலதிக விசாரணைகளுக்காக மிரிஹான பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இதனையடுத்துப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த கைது செய்யப்பட்டுள்ளார்.

## தமிழத் தரப்பை...

இன்று வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை தொடர்பாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வெளியிடப்பட்டுள்ள ஆதங்கம் உண்மையானது. அதனை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆசனங்களுக்காகவே பிரிந்து நிற்கின்றோம் எனக் கூறினார்கள். இந்தத்



தேர்தலில் தமிழ்க் கட்சிகளாகிய நாம் அனைவரும் ஒரு பொதுச் சின்னத்தின் கீழ் போட்டியிடுவோம் என்று முயற்சிகளை எடுத்திருந்தோம். அது சாத்தியப்படவில்லை. எனவே, அது மனவேதனையைத் தருகின்றது.

திருகோணமலை மற்றும் அம்பாறையில் ஒன்று சேர்ந்து போட்டியிடத் தீர்மானித்தோம். ஆனால், அம்பாறையில் தமிழரசுக் கட்சி குழப்பி விட்டது. அம்பாறையில் பிரதிநிதித்துவம் இழக்கும் நிலை தமிழரசுக் கட்சியால் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் நாம் ஐந்து கட்சிகள் தற்போது ஒன்றாக இருக்கின்றோம். ஏனையவர்களையும், உள்ளே கொண்டு வருவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்தும் செய்வோம்.

மக்கள் கோபத்தில் உள்ளார்கள். நாங்கள் பிரிந்ததால் அவர்கள் வெறுப்படைந்து உள்ளார்கள். நாங்கள் போகும்போது அவர்கள் நேரடியாகவே கூறுகின்றார்கள்.

தேர்தலின் பின்னராவது தமிழ்க் கட்சிகள் இணைந்து செல்வதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும். அத்துடன் தேர்தலின் பின்னர் ஒற்றுமையை விரும்பாதவர்கள் மீது மக்களின் கோபம் பிரதிபலித்திருக்கும். அவ்வாறு மக்கள் பாடம் புகட்டும்போது ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். எனவே, மக்களின் விருப்பத்துக்கு மாறாகச் செயற்படுபவர்களை அவர்களே பார்த்துக்கொள்வார்கள்.

கடந்த அரசில் அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த அரசும் புதிய ஜனாதிபதியும் அது தொடர்பான கருத்துக்களைக் கூற மறுக்கின்றனர். எனவே, அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்படவுள்ளதாகச் சொல்லப்பட்ட ஊதியம் கூட்டப்படவேண்டும். எமது கட்சி இதற்காகத் தொடர்ந்தும் குரல் கொடுக்கும்.

நாடாளுமன்றத் தேர்தலில் ஆசனங்களைக் கூடுதலாக எடுக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டே ஊழல் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என அரசால் காட்டப்படுகின்றது. அத்துடன் மாகாண சபை முறைமையை ஒழிக்க வேண்டும் என்பது இந்த அரசின் குரலாக உள்ளது. குறிப்பாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிக்க வேண்டும் என்று குரல் கொடுத்தவர்கள் இவர்களே. ஆனால், அதனை நீக்குவதற்கான சூழலில் அவர்கள் இருப்பது போல் தெரியவில்லை.

இடதுசாரித்துவத்தை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி இன்று சிங்கள தேசிய வாதத்தோடு இணைந்து செயற்படுகின்றது. அந்தவகையில் திடமான ஒரு அரசு அமைவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே இருக்கும்.

எனவே, நாம் 11 ஆசனங்களைப் பெறும்போது அதிகாரம் மிக்கவர்களாக இருப்போம். இம்முறை தமிழ்த் தரப்பைப் புறந்தள்ளி புதிய அரசை அமைக்க முடியாது. அதனை நிர்ணயிக்கின்ற சக்தியாகத் தமிழ்த் தரப்பு இருக்கும்.” – என்றார்.

# மலையகம் தொடர்பில் ஜே.வி.பி. கள்ள மௌனம்

## மனோ காட்டம்



மலையகத் தமிழர்கள் இந்த நாட்டில் எதிர்கொள்ளும் அவலங்களுக்கு மலையக அரசியல் கட்சிகளே முற்று முழுதான காரணம் என ஜே.வி.பி. காட்ட முயல்கின்றது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவரது முகநூல் பதிவு வருமாறு:-

"மலையக அவலங்களுக்கு ஒரு பிரதான காரணமும், ஒரு துணைக் காரணமும் என இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

**பிரதான காரணம்:**

சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகள், 1950 களிலிருந்து அப்பாவி சிங்கள மக்கள் மத்தியிலே மலையக மக்களுக்கு எதிராகப் பேரினவாத சிந்தனையை விதைத்தது. இதற்குள் ஜே.வி.பி. என்ற இன்றைய என்.பி.பி., மலையகத் தமிழர்களை, வகுப்பு நடத்தி, அந்நியர்களாக அடையாளம் காட்டியது. இந்திய ஏகாதிபத்தியத்தின் அம்சமாக மலையகத் தமிழர்களைக் காட்டியது.

**துணைக் காரணம்:**

மலையகத்தில் ஒரு பிற்போக்குக் கும்பல், மாறி மாறி வந்த எல்லா அரசுகளிலும் சுமார் 45 வருடங்கள் அங்கம் வகித்து, மலையகத் தமிழர்களை ஏமாற்றியது.

இந்த வரலாற்றுப் பின்னணியில், 2015ஆம் ஆண்டு தோன்றிய மலையக முற்போக்கு அணிதான், தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகும். நாம் நாற்பது வருடங்கள் ஆட்சியில் இருக்கவில்லை. ஆக, நான்கே வருடங்கள்தான் நாம் ஆட்சியில் இருந்தோம்.

எமது காணி உரிமையை அமைச்சரவைக்குக் கொண்டு சென்று எமது முற்போக்கு பயணத்தை ஆரம்பித்துள்ளோம். தேசிய அரங்கில் மலையக மக்களின் அபிலாஷைகளை மலையக சாசனமாக முன்வைத்தோம். அதில் காணி உரிமை எமது பிரதான கோஷம்.

ஆனால், ஜே.வி.பி. என்ற இன்றைய என்.பி.பி., மலையகத்தின் முற்போக்கு அணியையும், பிற்போக்குக் கும்பலையும் ஒரே கூடையில் போட்டு பிரசாரம் செய்கின்றது. இது ஒரு அரசியல் கபடத்தனம்.

இதற்கு இந்தக் கட்சியில் இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் மலையக தமிழ் நபர்கள் விடயம் விளங்கியும், விளங்காமலும் துணை போகின்றார்கள். இந்தப் புதிய புரட்சியாளர்களை வைத்து மலையக அரசியல்வாதிகளைக் கரித்து கொட்டச் செய்து ஜே.வி.பி. தனக்குத் தானே கைதட்டிக் கொள்கின்றது.

மலையக பிற்போக்குக் கும்பலை விரட்டி அடியுங்கள்! நாங்கள் அதைத்தான் செய்து கொண்டு இருக்கின்றோம். ஆனால், எங்களை நோக்கி வராதீர்கள்.

பெருந்தோட்ட மலையக மக்களின் காணி உரிமை பற்றி திட்டவட்டமாக எதுவும் பேசாமல், ஜே.வி.பி. தலைமை கள்ள மௌனம் காக்கின்றது. சும்மா மலையக மக்கள் தொடர்பில் அனுதாப வார்த்தைகளை மாத்திரம் பேசி வாக்குச் சேர்க்கின்றது.

நான் பலமுறை நாடாளுமன்றத்திலும், வெளியேயும் அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமாரவை விளித்துக் கூறியுள்ளேன். இப்போதும் கூறுகிறேன். "நண்பர் அநுர, எமக்கு அனுதாபம் வேண்டாம்! நியாயம்தான் வேண்டும்!" - என்றுள்ளது.

# மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முன்பிருந்த மக்கள் பிரதிநிதிகளே காரணம்

## புதியவர்களுக்கு வாய்ப்பளியுங்கள் என்கிறார் ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் வேட்பாளர்



(கி.வசந்தன்)

"வன்னியில் மக்கள் தற்போது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முன்பிருந்த மக்கள் பிரதிநிதிகளே காரணம். இதனால் இம்முறை புதியவர்களுக்கு வாய்ப்பளியுங்கள்."

- இவ்வாறு ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் வேட்பாளரும் தொழிலதிபருமான கு.விஜேந்திரரத்தினம் (விஜயன்) தெரிவித்தார்.

வவுனியாவில் இன்று இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"போரால் பாதிக்கப்பட்ட வன்னி மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை உள்ளது. மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது. விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு சார்ந்த பல பிரச்சினைகளைக் கிராமிய மக்கள் எதிர்நோக்குகின்றனர். இந்தநிலை தொடர்வதற்கு முன்பிருந்த மக்கள் பிரதிநிதிகளே காரணம். அவை தீர்க்கப்பட வேண்டுமாக இருந்தால் ஆளுமையுள்ள சிறந்த திட்டமிடல் உள்ள இந்த விடயங்கள் தொடர்பான அறிவுள்ளவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும்.

வன்னி மக்கள் அவ்வாறான தொருவரை தெரிவு செய்வதன் மூலமே வன்னியை வளமாக்க முடியும். மக்களின் தேவைகளை அறிந்து அதற்கேற்ற செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

இளைஞர், யுவதிகள் பலர் வேலை வாய்ப்பு இல்லாது அவர்களது குடும்பங்கள் இன்று பாதிக்கப்பட்டுள்ளன. அரச தொழில் வாய்ப்பை மட்டும் நம்பாது எமது மண்ணில் கைத்தொழிற்சாலைகளை நிறுவி அதற்கேற்ப தொழில் வாய்ப்புக்களை நாம் உருவாக்க வேண்டும்.

இவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்த மண்ணின் மைந்தனாக களமிறங்கியிருக்கும் எமக்கு உங்களது ஆதரவை வழங்குங்கள். அரச உத்தியோகத்தர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் அரசுக்குத் தொடர்ந்தும் அழுத்தம் கொடுப்பதற்கும் அவர்களது வாழ்க்கைச் சுமையைக் குறைப்பதற்கும் நாம் குரல் கொடுப்போம்.

வன்னித் தேர்தல் தொகுதியில் ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் தபால் பெட்டிச் சின்னத்தைப் பலப்படுத்த வேண்டும்." - என்றார்.

# திருகோணமலையில் இறந்த நிலையில் கரையொதுங்கி வரும் கிளாத்தி மீன்கள்





(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, உட்துறைமுகப் பகுதி கடலில் நேற்று முதல் கிளாத்தி இன மீன்கள் அதிகளவில் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றன.

ஆழமான கடற்பகுதியில் உள்ள பாறைகளை வாழிடமாகக் கொண்ட இந்த இன மீன்கள் என்ன காரணத்தால் இறந்துள்ளன எனத் தெரியவில்லை.

இதேவேளை, உட்துறைமுகக் கடலில் ஒரு சில நாட்களாகப் பச்சை நிறமான படிவமொன்று மிதந்த நிலையில் காணப்படுகின்றது.

இந்தப் படிவம் துறைமுகத்தில் தரித்து நின்ற அல்லது பயணித்த கப்பல்களில் இருந்து வெளியேறிய ஏதேனும் இரசாய னத் திரவங்களாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்பதாக மீனவர்கள் கூறினர்.




EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அமைதியான தேர்தல் அவசியம்

இலங்கையில் தேர்தல் சரித்திரத்தில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் குறிப்பிடத்தக்க ஒன்று.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரான பிரசார காலத்திலும், தேர்தல் சமயத்திலும், பின்னரும் ஒப்பீட்டளவில் வன்முறைகள் குறைந்த - மிகவும் அமைதியான - நேர்த்தியான - தேர்தலாக கடந்த ஜனாதிபதித் தேர்தல் பதிவாகி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தேர்தல் பிரசார காலத்திலும் தேர்தல் சமயத்திலும் வன்முறைகள் குறைந்து, அமைதியான நிலைமை நீடித்த போதிலும், வாக்கு எண்ணிக்கையின் போதும் அதன் பின்னரும் வன்முறைகள் வெடிக்கும் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டு வந்த போதிலும், அப்படி அனைத்தும் எதுவும் நேராமல், சட்டம் - ஒழுங்கு நிலைமை முழுமையாகத் திருப்தி தரும் விதத்தில் நிலைநாட்டப்பட்டது என்பது ஈண்டு குறிப்பிடப்பட வேண்டிய விடயம்.

தேர்தல் ஆணையமும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்ட வேண்டிய பொலிஸ் தரப்பு உட்பட்ட துறைகளும் மிகச் சிறப்பாக அந்தத் தேர்தலை நடத்தி முடித்தமைக்காக பல தரப்புகளினாலும் பாராட்டப்பட்டன.

அதே சுமுக நிலைமை இப்போதைய பொதுத் தேர்தலின் போதும் இதுவரையும் நீடிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

தேர்தல் பிரசாரம் அமைதியாகவும், முறையாகவும் நடைபெறுவதாக கருத்து வெளியிட்டுள்ள தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் சிறி இரத்நாயக்கா, அதே சூழலை தேர்தல் முடியும் வரை கைக்கொள்ளுமாறு சகல தரப்பினரையும் கோரி இருக்கிறார்.

வழமை போல தேர்தல் சட்ட விதிமுறைகள் பற்றிய முறைப்பாடுகள் வந்து கொண்டிருந்தாலும், தேர்தல் வன்முறைகள் பற்றிய முறைப்பாடுகள் பெருமளவில் குறைந்து இருப்பது முக்கிய விடயமாகும்.

தேர்தலையொட்டி சுவரொட்டிகள் ஒட்டப்படுவது, விதி முறைகளை மீறி பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்று வழமையான அத்துமீறல்கள் தவிர்க்க முடியாதவைதான். அவை தொடர்பில் சட்டம் - ஒழுங்கை நிலை நாட்ட வேண்டிய பொலிஸ் தரப்பினரும் கண்காணிப்பாளர் தரப்பினரும் மிகுந்த சுறுசுறுப்போடும் முனைப்போடும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

பொலிஸார் இதுவரையில் தேர்தலில் போட்டியிடும் ஐந்து வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் 120 ஆதரவாளர்களைக் கைது செய்திருக்கின்றனர் என்று பொலிஸ் பேச்சாளர் நேற்றுக் குறிப்பிட்டு இருக்கிறார்.

வேட்பாளர்கள் கைது தொடர்பான விடயங்கள் முழு அளவில் நடைபெற்ற விவகாரங்கள் அல்ல. ஒரு சில இடங்களில் தம் விருப்பப்படி - தம் இஷ்டப்படி - பொலிஸார் சிற்றில இடங்களில் மாத்திரம் நடவடிக்கை எடுத்தமையால் ஐந்து வேட்பாளர்கள் வரை கைது செய்யப்பட்டு இருக்கின்றார்கள்.

என்ன காரணத்துக்காக அந்த ஐந்து வேட்பாளர்களும் கைதானவர்களோ, அதே தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பான விடயத்தை இலங்கை முழுவதும் பொலிஸார் சமச்சீராக - ஒரே மாதிரியாக - நடைமுறைப்படுத்தியிருந்தால் நூற்றுக்கணக்கான வேட்பாளர்கள் கைதாகி இருப்பார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

தேர்தலுக்கு இன்னும் இரண்டு வாரங்களே உள்ளன. சில சமயங்களில் தேர்தல் திகதியை ஒட்டி வரும் நான்காம் திகதி இடம்பெறும் உயர்நீதிமன்ற வழக்கு விசாரணையின் போது தேர்தலை மேலும் ஓரிரு நாள்களுக்கு ஒத்திவைக்கும் - தள்ளிப்போடும்-முடிவுஎடுக்கப்படக்கூடும். அப்படி எடுத்தால் பொதுத்தேர்தல் வாக்களிப்பு மேலும் இரு நாள்கள் தள்ளி இடம்பெறக்கூடும்.

அதுவரையிலும், அதன் பின்னர் அளிக்கப்பட்ட வாக்குகள் எண்ணப்பட்டு அவற்றின் அடிப்படையில் தேர்தல் முடிவுகளும், தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்களின் விவரங்களும் அறிவிக்கப்படும் வரை இப்போதைய அமைதி நிலையைத் தொடர்ந்தும் பேணுவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் உறுதியோடு செயற்படுவது அவசியம்.

இந்தப் பொதுத் தேர்தலும் அமைதியாக நடந்து முடியுமானால், அடுத்தடுத்து ஜனாதிபதி தேர்தலையும் பொது தேர்தலையும் மெச்சத்தக்க வகையில் நடத்தி முடித்த பெருமை தேர்தல் ஆணையத்துக்கும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொலிஸார் உட்பட்ட தரப்பினருக்கும் கிட்டும் என்பது உண்மைதான்.



# அனைவர் வாழ்விலும் இன்பம் உண்டாகட்டும்!

தமிழர் பண்டிகைகளில் பிரதான வகிபாகம் வகிக்கும் ஓர் பண்டிகையாக தீபாவளி காணப்படுகிறது. அன்பையும் பண்பையும் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் மன மலர்வையும் தருவதாக அல்லது வெளிப்படுத்துவதாக தீபத்திருநாள் காணப்படுகிறது.

நாம் ஒவ்வொருவரும் ஏனையவர்களுக்கும் புரிந்துணர்வுடன் வாழ வேண்டும். ஒரு இனத்தின் உணர்வுகளை புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு சமயத்தினரது உயர்வைத் தனித்துவத்தைப் பேண வேண்டும். தனி ஒவ்வொருவரது உணர்வுக்கும் மதிப்பு வழங்க வேண்டும்.

ஆனால் நமது தேசத்தில் இக்காலப்பகுதி வரை இவற்றைப் பூரணமாகக் காண இயலாதுள்ளது. சாதாரண மக்கள் முதல் ஆட்சியில் உள்ளவர்கள் வரை அனைவரது மனநிலையும் மாற வேண்டும். அனைவரையும் சமமாக மதிக்கும் வகையில் மனநிலை மாற்றம் பெற வேண்டும்.

இவற்றை மனதில் வைத்து, இந்துக் குருமார் அமைப்பு சார்பில்– ஒவ்வொருவரையும் சூழவுள்ள இருள் அகன்று மனதிலும் எண்ணத்திலும் செயலிலும் நல்லன நடைபெற திருவருளும் குருவருளும் ஒருசேர கிடைக்க வேண்டும் என அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக் களையும் நல்லாசிகளையும் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

**சிவாகமகலாநிதி**
**சிவஸ்ரீ கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்,**
**தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.**
**சிவஸ்ரீ ச. சாந்தரூபக் குருக்கள்,**
**செயலாளர், இந்துக் குருமார் அமைப்பு.**

## நல்லதை உணர்த்திடும் நலந்திகழ் தீபாவளி...!

உல்லாசம் பொங்க உள்ளம் மகிழ்ந்திட
உறவுகள் கூட உணர்ச்சி பொங்கிட
ஒளியில் இல்லம் மூழ்கிச் சிறந்திட
வருகின்ற நாளே மனமுறை தீபாவளி!

பட்டாசு மத்தாப்பு கைகளை நிறைக்க
பாங்குடன் சிறியவர் பெரியவர் மகிழ
வெடித்திடும் போதும் விரிந்திடும் போதும்
வேதனை துன்பம் காணாமல் போகுமே.

சமயமும் சேரும் சமூகமும் சேரும்
சாத்திரம் சடங்கு சேர்ந்துமே நிற்கும்
இல்லமும் இணையும் இன்பமும் இணையும்
நல்லதை உணர்த்திடும் நலந்திகள் தீபாவளி!

மணமக்கள் வாழ்வில் மகிழ்வினை ஊட்ட
மாமனார் வீட்டை நாடியே நிற்க
விருந்துகள் நடக்க வெகுமதி கிடைக்க
நலந்திகள் தீபாவளி நல்வழி சமைக்கும்.

புத்துடை மனதில் புத்துணர் வூட்டும்
புதுப் பொலிவுடனே யாவரும் திகழ்வர்
தித்திக்க பண்டம் வீடெலாம் மணக்கும்
தித்திக்கும் உணர்வை ஊட்டுமே தீபாவளி!

இசையுடன் விழாக்கள் எங்குமே நடக்கும்
இயற்றமிழ் அரங்கம் சிறப்பாய் இருக்கும்
ஆடலும் பாடலும் அரு விருந்தாகும்
அனைவரும் இணைந்து ஆனந்தம் அடைவர்

ஆலயம் நோக்கி அனைவரும் ஏகுவர்
ஆண்டவ னிடத்து வேண்டுவர் பலவரம்
பரவசப் பக்தியில் மூழ்குவர் பலருமே
பண்ணிசை பாடியே பரவுவர் பணிவுடன்

சிறியவர் ஓட பெரியவர் தடுக்க
விழுந்தவர் எழும்ப இளசுகள் சிரிக்க
குதூகலம் என்பது விதம் விதமாக
தீபா வளியின் அங்கமாய் மிளிரும்

இருப்பவர் இனிப்பை நிறையவே சுவைப்பார்
இல்லார் இனிப்பை எண்ணியே ஏங்குவார்
கொடுத்துமே மகிழ்வோம் கொண்டாட்டம் சிறக்கும்
நிலத்தினில் தீபாவளி நிறைவினைத் தரட்டும்

நிம்மதி மனத்தில் நிலைத்திடச் செய்வோம்
சொல்லினைச் சுவையாய் கொடுத்துமே நிற்போம்
இல்லவர் உள்ளவர் பேதத்தைக் களைவோம்
எல்லோர் மனத்திலும் இன்பத்தை நிறைப்போம்.

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,**
**மெல்பேர்ன்,**
**ஆஸ்திரேலியா.**



**மாவீரர்களின் நினைவாக**

# காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ள பண்பாட்டைப்பேணி நாம் மரம் நடுவோம்

## பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

போரின் முற்றுகைக்குள்ளும் இயற்கை எனது நண்பன் என்று சொல்லி சூழல் நல்லாட்சி ஆணையம், வனவளப் பாதுகாப்புப்பிரிவு என்பனவற்றை உருவாக்கி எமது சூழலைப் பேணிப் பாதுகாத்த தலைமைத்துவத்தைக் கொண்டிருந்தவர்கள் நாங்கள்.

மரங்களை ஆதித் தெய்வங்களாக வழிபட்ட நாம் இறந்தவர்கள் நினைவாக மரங்களை நாட்டும் தொல் மரபையும் கொண்டிருந்தோம்.

இந்தப் பண்பாட்டு மரபே காலநிலை மாற்றங்களின் தாக்குதல்களில் இருந்து எம்மையும் எம்பூமியையும் காப்பாற்றும். அந்த வகையில் மாவீரர்களைப் போற்றும் இந்தப் புனித கார்த்திகையில் பண்பாட்டின் தொடர்ச்சியைப் பேணி அவர்களின் நினைவாகவும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும் ஆளுக்கொரு மரம் நடுவோம்.

இவ்வாறு என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையின் தீர்மானத்துக்கு அமைவாக 2014ஆம் ஆண்டு முதல் கார்த்திகை மாதம் வடமாகாண மரநடுகை மாதமாகக் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடகஅறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உலகம் இன்று எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளில் தலையாய பிரச்சினையாகக் காலநிலை மாற்றம் உருவெடுத்துள்ளது. பூமியின் சராசரி வெப்பநிலை ஆண்டுக்கு ஆண்டு எகிறிவருகிறது. காட்டுத்தீயும் வெப்ப அலைகளும் முன்னெப்போதையும்விட மூர்க்கம் கொண்டு பொசுக்கி வருகிறது. இன்னொருபுறம், பருவம் தப்பிக் கடும்மழை கொட்டுகிறது. வருடாந்த மழை வீழ்ச்சி ஓரிரு நாட்களிலேயே பேய்மழையாகப் பொழிகிறது. இவை ஏற்படுத்தும் வெள்ளப்பெருக்கிலும் மண்சரிவிலும் சிக்கி உலகம் பூராவும் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கானோர் பலியாகி வருகிறார்கள்.

துருவப் பகுதிகளில் உள்ள பனி மலைகள் உருகி வருவதன் காரணமாகக் கடல் மட்டம் உயர்ந்து செல்கிறது. இதனால் உலகநாடுகள் பலவற்றின் கரையோரங்களைக் கடல்நீர் விழுங்கத் தொடங்கியுள்ளது. இதற்கு இலங்கைத் தீவும் விதிவிலக்கல்ல. கடல் மட்ட உயர்வால் யாழ். குடாநாடு ஆனையிறவுப் பகுதியில் கடலால் துண்டிக்கப்பட்டுத் தனித் தீவாக உருவாகும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. உலகம் இன்று அனுபவிக்கத் தொடங்கியுள்ள இந்த அவலங்களுக்குக் கரிக்காற்றை உறிஞ்சுகின்ற காடுகளை அளவுகணக்கில்லாமல் நாம் அழித்துத் தள்ளுவதே அடிப்படைக் காரணமாகும்.

பூமி சூடாகிவருவதன் எதிர்விளைவுகளாகக் கடும் வறட்சி ஏற்பட்டுத் குடி தண்ணீருக்காக நெடுந்தொலைவு அலைய வேண்டி ஏற்படும். பயிர்களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்து உணவுப் பாதுகாப்புக் கேள்விக்குறியாகும். கால்நடை வளர்ப்பைக் கைவிடவேண்டி ஏற்படும். வளியில் மாசுகள் அதிகரித்துச் சுவாசநோய்களால் மூச்சுத் திணற வேண்டி ஏற்படும்.

மனஅழுத்தம் ஏற்பட்டுத் தற்கொலை உணர்வு தூண்டப்படும் எனவும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வதற்கு இப்போதிருந்தே நாம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடில் தாங்கொணாத் துயரங்களை அனுபவிக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளார்.



# கெசல்கமு ஓயா கால்வாயில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

(மஸ்கெலியா)

காசல்ரீ நீர் தேக்கத்துக்கு நீரை வழங்கிவரும் பிரதான ஓயாவான கெசல்கமு ஓயா கால்வாயில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொகவந்தலாவ பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பில் அதிகாரியிடம் கேட்டபோது,



கெசல்கமு ஓயாவில் கால்வாயில் தனியார் நீர் மின் நிலையத்துக்கு அடுத்ததாகச் சடலம் காணப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

பிரேத பரிசோதனைக்காகச் சடலம் டிக்கோயா கிளங்கன் மாவட்ட ஆரம்ப வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

அடையாளம் காண பொது மக்களின் உதவியை பொகவந்தலாவ பொலிஸார் பாடியுள்ளனர்.

உடலம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் உள்ள பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மலையகத்தில் களைகட்டிய தீபாவளி!

(க.கிஷாந்தன்)

மலையக மக்கள் சமய வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து தீபாவளி பண்டிகையை இன்று வெகுவிமர்சியாகக் கொண்டாடினார்கள்.

ஹட்டன் பகுதியில் ஹட்டன் அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் பிரதான குருக்கள் ஷன் மதுரன் குருக்கள் தலைமையில் தீபாவளி விசேட சமய வழிபாடுகள் நடைபெற்றன.

விசேட பூஜை வழிபாடுகளில் ஆலய பரிபாலன சபையினர் உட்பட பொது மக்களும் ஈடுபட்டிருந்தனர். அத்தோடு மலையகத்தில் பல ஆலயங்களில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.







# பொத்துவில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உளநலவியல் தொடர்பான பயிற்சி நெறி

(எம். எப். றிபாஸ்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்கு உட்பட்ட பொத்துவில் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான குழந்தை உள நலவியல் தொடர்பான பயிற்சி நெறி பொத்துவிலில் நேற்று (30) நடை பெற்றது.

பொத்துவில் பிரதேச முன்பள்ளி அபிவிருத்தி ஒன்றியத்தின் தவிசாளர் எம்.எஸ்.எம்.அப்துல் மலிக்யின் ஏற்பாட்டில் தாருல் பலா வித்தியா லயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதேச செயலக உத்தியோகத்தர் எம். சுக்கூர் வளவாளராகவும், முன்பள்ளிக்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப் பாளர் பாயிஸ் பிரதம அதிதியாகவும் கலந்து கொண்டனர்

சமார் 60 இற்கும் மேற்பட்ட முன் பள்ளி ஆசிரியர்கள் இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டனர்.

# திருமலை முஸ்லிம் பிரதிநிதித்துவம் 1948 முதல் பாதுகாக்கப்பட்டு வருகிறது

## பொய், வதந்திகளுக்கு ஏமாற வேண்டாம் என்கிறார் வேட்பாளர் தௌபீக்

1948களில் இருந்து திருமலை முஸ்லீம்களின் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. பொய், வதந்திகளுக்கு மக்கள் ஏமாற வேண்டாம்.

றெலிபோன் சின்ன வேட்பாளரும் முன்னால் நாடாளுமன்ற உறுப்பினரு மான எம்.எஸ்.தௌபீக் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஐக்கிய மக்கள் சக்தி கடந்த முறை போன்று இந்த முறையும் இரு ஆச னங்களைத் திருகோணமலை மாவட்டத்தில் பெறும்.

1948 இல் இருந்து எமது பிரதிநித் துவம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இம் முறையும் கடந்த முறை போன்று இரு ஆசனங்களை பெற வேண்டும்.

43 வீதமான முஸ்லிம்கள் திருகோ ணமலை மாவட்டத்தில் உள்ளார்கள். பொய்யான, வதந்திகளை நம்பி மக்கள் ஏமாறாமல் இம் முறை சிந்தித்து வாக்க ளிக்க வேண்டும்.




கிண்ணியாவில் பல கட்சி பல சுயேட்சை வேட்பாளர்கள் களமிறக்கப்பட் டுள்ளனர். இது பிரதிநிதித்துவத்தை இல்லாமல் ஆக்கச் செயற்படும் விதமாக செயற்படுகிறார்கள்.

எனவே கடந்த முறை எவ்வாறு வாக்களித்து இரு பிரதிநிதிகளை பெற்றோமோ அதே போன்று இந்த முறையும் அந்த ஆசனங்களை நாம் தக்க வைத்து கொள்ள மக்கள் சிந்தித்து றெலிபோன் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும்.- என்றார்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# அம்பாறை கரையோர பிரதேசங்களில் பரவலாக அதிகரித்துள்ள திருட்டுகள்!

## எச்சரிக்கை விடுத்துள்ளனர் பொலிஸார்

**(வி.ரி. சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களில் அண்மைக் காலமாக திருட்டு, கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று பொது மக்களுக்கு முக்கிய அறிவுறுத்தல்கள் பொலிஸாரால் வழங்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் நிந்தவூர், அக்கரைப்பற்று, சம்மாந்துறை, கல்முனை, சவளக்கடை, காரைதீவு, சாய்ந்தமருது, பெரிய நீலாவணை, உள்ளிட்ட பொலிஸ் நிலையங்களுக்கு உ ட்பட்ட பகுதிகளிலும் கடந்த சில நாள்களாக வீரமுனை, மருதமுனை, மண்டூர் , பகுதிகளிலும் அதிகளவான வீடு உடைத்து நகை, பணம் திருடுதல் மற்றும் மோட்டார் சைக்கிள் காணாமல் சென்ற சம்பவங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

குறித்த சட்டவிரோத சம்பவங்களில் வீடுகள் உடைத்து திருடும் சம்பவம் அதிகாலை வேளைகளில் இடம்பெற்றுள்ளன. வீட்டின் ஜன்னல் கிறில் மற்றும் ஓடுகள் பிரிக்கப்பட்டு வீட்டு உரிமையாளர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது திருட்டுகள் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தவிர மோட்டார் சைக்கிள் திருட்டுக்கள் சம காலங்களில் பல்வேறு பொலிஸ் நிலைய பகுதிகளிலும் அதிகரித்துள்ளன. பெரும்பாலும் பொது இடங்களில் தரித்து வைக்கப்பட்ட நிலையிலும் வயல் வேலை காரணமாக வீதி ஓரங்களில் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டு வருகின்றன.

சில பொலிஸ் பிரிவுகளில் வைத்தியசாலை, பொதுச்சந்தை, நகரப் பகுதிகளிலும் மோட்டார் சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளமை சிசிடிவி காணொளிகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

எனவே சட்டவிரோத செயற்பாடுகள் சம்பந்தமாக அவதானமாக இருப்பதுடன் சந்தேக நபர்கள் தொடர்பாக தகவல் ஏதேனும் தெரிந்தால் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு தெரியப்படுத்துமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# 20 வருடங்கள் எனக்கு வேண்டாம் ஒரேயொரு சந்தர்ப்பம் தாருங்கள்!

## மக்களிடத்தில் சிராஸ் மீராசாஹிப் வேண்டுகோள்!!





**(அபு அலா)**

கல்முனை மாநகர சபையின் முதல்வராக இருந்த காலத்தில் எமது சபையை ஒரு ஊழல்களற்ற மாநகர சபையாகவும், நாட்டிலுள்ள சபைகளைவிட சிறந்தொரு சபையாக மாற்றியமைத்த பெருமை எனக்கும், உங்களுக்கும் உள்ளது என்று, கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வரும் திகாமடுல்ல மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் 3 ஆம் இலக்க வேட்பாளரும் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சாய்ந்தமருது பொதுத்தேர்தல் அலுவலகம் கட்சியின் 3 ஆம் இலக்க வேட்பாளரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில் நேற்றிரவு (30) திறந்து வைக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,


நீங்கள் தந்த அமானிதத்தின் மூலம் எனக்குக் கிடைத்த முதல்வர் பதவியின் ஊடாக, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உதவிகளைப் பெற்றுக்கொண்டு கல்முனை மாநகரத்தை பல்வேறுபட்ட அபிவிருத்திப் பாதையில் கொண்டு சென்றதை நீங்கள் அறிவீர்கள்.

இன மத வேறுபாடின்றி வாழ்வாதார உதவிகள், பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், விளையாட்டுக் கழகங்களுக்கான உபகரணங்கள், திண்மக் கழிவகற்றல் முறையில் எவ்வித தடைகளுமின்றிய நடைமுறை போன்ற பல்வேறுபட்ட விடயங்களைச் செய்ய ஒரு பம்பரம் போன்று இயங்கி வந்ததையும் கண்ணூடாகக் கண்டீர்கள்.

எனது இந்தச் சேவையை அம்பாறை மாவட்டத்திலுள்ள எல்லா மக்களுக்கும் வழங்க வேண்டும் என்ற சிந்தனையில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும், அதன் தலைமையும் முடிவெடுத்து இத்தேர்தலில் என்னை களம் இறக்கியுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து இன மக்களுக்கும் இன மத வேறுபாடின்றிய சேவைகளை வழங்கி வைக்க ஒரேயொரு சந்தர்ப்பத்தைத் தாருங்கள் என்று நான் கேட்கிறேன். எனக்கு 20 வருடங்கள் வேண்டாம். எனது செயற்பாடுகளையும், வேலைத்திட்டங்களையும் நீங்கள் அவதானித்து அதன் பின்னர் முடிவெடுத்துக் கொள்ளுங்கள்.– என்றார்.

இந்த தேர்தலில் காரியாலய திறப்பு விழாவில் உலமாக்கள், முன்னாள் பிரதேச சபை தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள், கட்சிப் போராளிகளென பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




# குவிந்த கிடக்கும் குப்பைகளால் ஹட்டன் நகரில் அசௌகரியம்

(மஸ்கெலியா)

ஹட்டன் நகரின் ஆங்காங்கே குப்பைகள் குவிந்து கிடப்பதால், அப்பகுதி மக்களின் சுகாதாரத்துக்குப் பல்வேறு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளது என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஹட்டன் நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வில்பிரட் புர, காமினி புர, பண்டாரநாயக்க புர, உள்ளிட்ட இடங்களில் குப்பைகள் உரிய முறையில் அகற்ற படாமையால் இந்த நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

இதனால் நுளம்புகள் பெருகும் அபாயம் அதிகரித்துள்ள தோடு, சுகாதார சீர்கேடான நிலை தோன்றியுள்ளது.

குறித்த பிரதேசங்களில் குவிந்து கிடக்கும் குப்பைகளால் பல்வேறு சுகாதார சீர்கேடுகள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

இந்த நிலைமைகள் குறித்து ஹட்டன் டிக்கோயா மாநகர சபையின் செயலாளர் வினவிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் ஆராய்ந்து உரிய அதிகாரிகளுக்கு தேவையான பணிகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை வழங்க நடவடிக்கை எடுப்பார் என்று தெரிவித்தார்.

# ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நூல்கள் கனடாவில் வெளியீடு !

கனடாவில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு ஸ்கார்பரோ ரீகிரியேசன் சென்டர் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை இந்த வெளியீட்டு நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வின்தலைமையுரையைப் பேராசிரியர் இ. பாலசுந்தரம் வழங்குவார். அத்துடன் சிறப்புரையை தமிழர் தகவல் ஆசிரியர் எஸ். திருச்செல்வம் வழங்குவார்.

இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை புகழ்பெற்ற வானெலி அறிவிப்பாளர் இளங்குமரன்இ கனடா தமிழ்ப் பாடசாலைகளின் அதிபர் கா. யோ. கிரிதரன்இ மற்றும் எழுத்தாளர் திருமதி சிறி ரஞ்சினி ஆகியோர் வழங்குவர்.

பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை அரசியல் ஆய்வாளர் லெனி மரியதாஸ் நிகழ்த்துவார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை எழுத்தாளர் மீரா பாரதி ஆற்றுவார்.




அத்துடன் இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை கவிஞர் அகனி சுரேஷ் ஆற்றுவார்.

அத்துடன் இந்த நூல் வெளியீட்டு நிகழ்வின் சிறப்புரையையும்இ நூலாசிரியரின் ஊடக – எழுத்து பற்றி உலகத்தமிழர் ஆசிரியர் கமல் நவரட்ணம் வழங்குவார். கனடாவில் நிகழும் இந்நூல் வெளியீட்டின் இறுதியில் ஏற்புரையை நூலாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார்.





# நாவாந்துறையில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்புக் களப் பணிகள்!

யாழ். குடாநாட்டில் தற்போதைய பருவமழையைத் தொடர்ந்து நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ள நிலையில் சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தின் இறுதி நாள் நேற்று முன்தினம் (29)நாவாந்துறையில் அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சமன் பத்திரன மற்றும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் ஆகியோரின் வழிகாட்டலுக்கு அமைய தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இடம்பெற்று வருகிறது.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் த. தவரூபனின் நேரடிக் கண்காணிப்பில், சுகாதார உத்தியோகத்தர்கள், யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையின் டெங்குக் களப் பணியாளர்கள், இராணுவத்தினர், பொலிஸார், கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சுரேஷ்குமார் மற்றும் பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கு. பத்மகுமார் ஆகியோர் பங்குபற்றினர்.

இந்தப் பகுதியில் வீடுகள் மற்றும் பொது இடங்களுக்குச் சென்ற சுகாதாரக் குழுவினர் நுளம்பு பெருகும் ஆபத்தான பகுதிகளை இனங்கண்டு அழித்தனர். அத்துடன் உரிமையாளர்களுக்கு இது தொடர்பில் விழிப்புணர்வுகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்கினர்.









# கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் அணுக வேண்டும்

## இந்திய - இலங்கை கூட்டுப் பணிக்குழு கூட்டத்தில் வலியுறுத்தல்

ஆழ்கடலில் மீன் பிடிப்பது தொடர்பாக இந்தியா, இலங்கை கூட்டு பணிக் குழுவின் 6 ஆவது கூட்டம் கொழும்புவில் நேற்று நடைபெற்றது.

இந்திய மீன்வளத் துறைச் செயலர் அபிலக்ஷ் லிகி தலைமையில், மத்திய மீன் வளம், வெளியுறவு அமைச்சகம், தமிழ்நாடு அரசு அதிகாரிகள், இந்திய கடற்படை, கடலோரக் காவல்படை, மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் கொழும்புவில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் இடம்பெற்றிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில், இரு நாட்டு மீனவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்கு, மனிதாபிமான முறையில் தீர்வுகாண்பது என்று இரு நாட்டு அதிகாரிகளும் ஒப்புக் கொண்டனர்.

மீனவர்களைத் தாக்கி காயம் ஏற்படுத்துதல், உயிரிழப்புகளுக்கு வழி வகுத்தல் கூடாது. எந்த சூழ்நிலையிலும் பலத்தைப் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். இலங்கை சிறையில் உள்ள மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்று இந்திய தரப்பு சார்பாக வலியுறுத்தப் பட்டது.

# விஜய்யின் ‘பாசிசம், பாயாசம்’ பேச்சு: இந்திய கொம்யூனிஸ்ட் விமர்சனம்

“அரசியல் பாதையில் எதை தேர்ந்தெடுக்கப் போகிறார் என்பதில் நடிகர் விஜய்க்கு தெளிவில்லை. ‘பா.ஜ.க. பாசிசம் எனில், நீங்கள் என்ன பாயாசமா?’ எனக் கூறியதன் மூலம் பாசிச அபாயத்தை அவர் உணர்ந்ததாகத் தெரியவில்லை.”

– இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி விமர்சித்துள்ளது.

இது குறித்து அக்கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்ட அறிக்கையில்,

“சிறந்த திரைப்படக் கலைஞராக வலம் வந்த விஜய், தற்போது அரசியலில் முதல் அடி எடுத்து வைத்துள்ளார். அரசியல் பாதை என்பது இரண்டு வகையானது. ஒன்று இடதுசாரி பாதை, மற்றொன்று வலதுசாரி பாதை. அவர் எந்தப் பாதையை தேர்ந்தெடுக்க உள்ளார் என்பது குறித்து, அவரது மாநாட்டு உரையில் தெளிவில்லை. பிளவுவாத சக்திகளை எதிர்ப்பதாகக் கூறுகின்றார். அடுத்த கணம் தி.மு.கவை குறிவைத்து பேசுகிறார். திமுகவை மட்டுமல்ல, தி.மு.கவுடன் தோழமை கொண்ட கட்சிகளின் மீதும் மறைமுகமாக தாக்குதலை நடத்தியுள்ளார்.

‘பா.ஜ.க. பாசிசம் எனில், நீங்கள் என்ன பாயாசமா?’ எனக் கூறியதன் மூலம் பாசிச அபாயத்தை அவர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. எது பேரபாயம்? அரசியல் அமைப்புச் சட்டத்தை நிராகரிப்பது, புறம்பாகச் செயல்படுவது அரசியலமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்டுள்ள அமைப்புகளை சீர்குலைத்து, தனக்கு உட்பட்ட அமைப்பாகவும், தன் உத்தரவை நிறைவேற்றும் அமைப்பாகவும் மாற்றி, எதிர்க்கட்சிகளை பழிவாங்குவது, அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள சுயமாக சிந்திப்பது, பேசுவது, எழுதுவது என்ற ஜனநாயக உரிமையைப் பறித்து, மாற்று கருத்துடையோரை கொல்வது, மதச்சார்பின்மை கொள்கைக்கு மாறாக மதரீதியாக மக்களைப் பிளவுபடுத்தி தனது குறுகிய அரசியல் நோக்கத்தை நிறைவேற்றி வருவது போன்றவைதானே அபாயத்தின் உச்சம் என்பதனை உணர முடியவில்லையா?





சமத்துவம், சகோதரத்துவம், சமூக நீதி, சமூகநலத் திட்டங்கள் ஆகியனவற்றை செயல்படுத்துவதில், நிறைவேற்றுவதில் தி.மு.க. எங்கே தவறியுள்ளது என்பது குறித்து கூறினால் அது பரிசீலனைக்குரியது. அதைத் தவிர்த்து, பா.ஜ.க. கூறும் கருத்தையே இவரும் திருப்பி கூறுவதால் என்ன பயன்? இதன்மூலம் பாசிச பா.ஜ.கவுக்கு விஜய் துணை போகின்றாரோ? என்ற ஐயத்தை உண்டாக்குகிறது.” – என்று குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்க தேர்தல் கருத்துக் கணிப்பு; கமலா ஹாரிஸுக்கு குறையும் ஆதரவு



அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் 5 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ளது. இதில் ஜனநாயகக் கட்சி சார்பில் கமலா ஹாரிஸ/ம், குடிய ரசுக் கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்பும் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில் தேர்தலுக்கு முந்தைய கருத்துக் கணிப்புகள் வெளி வந்துள்ளன. இதில் கமலா ஹாரிஸுக்கு 44 சதவீத மக்களும், டொனால்ட் ட்ரெம்புக்கு 43 சதவீத மக்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ரொய்ட்டர் நிறுவனம் மற்றும் ஐ.பி.எஸ்.ஓ.எஸ். அமைப்பு இணைந்து, கடந்த வெள்ளி முதல் ஞாயிறு வரையில் 3 நாள் தேர்தல் கருத்துக் கணிப்பை மேற்கொண்டது. அமெரிக்க முழுவதும் 1,150 இளம் வாக்காளர்களிடையே இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. இதன் முடிவுகளை தற்போது அந்நிறுவனம் வெளியிட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் கமலா ஹாரிஸ் தேர்தல் களத்தில் இறங்கியபோது அவருக்கு ஆதரவு அதிகம் இருந்தது. ஆனால், செப்டம்பருக்கு பிறகு அவருக்கான ஆதரவு குறையத் தொடங்கியுள்ளது என்பது தற்போதைய கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

தற்போதைய கருத்துக் கணிப்பில் கமலா ஹாரிஸுக்கு 44 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்துள்ளனர். இது ட்ரம்புக்கான ஆதரவை விட 1 சதவீதம்தான் அதிகம் ஆகும். ஒக்டோபரில் நடத்தப்பட்ட முந்தைய கருத்துக் கணிப்பில் கமலா ஹாரிஸ் 2 சதவீதம் முன்னிலையில் இருந்தார்.

அமெரிக்காவின் பொருளாதாரம், வேலைவாய்ப்பு உருவாக்கம் சார்ந்து யாருடைய அணுகுமுறை சிறப்பாக உள்ளது என்று கேட்கப்பட்டதற்கு 47 சதவீதம் பேர் ட்ரம்பைக் குறிப்பிட்டுள்ளனர். 37 சதவீதம் பேர் கமலா ஹாரிஸைக் குறிபிட்டுள்ளனர்.

அமெரிக்க ஜனநாயகம், அரசியல் பிரச்சினைகளை கையாளுவதில் சிறந்து விளங்குவதாக கமலா ஹாரிஸுக்கு 40 சதவீதம் பேரும் ட்ரம்புக்கு 38 சதவீதம் பேரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். முந்தைய கருத்துக் கணிப்பில் இந்தப் பிரிவில் கமலா ஹாரிஸ், ட்ரெம்பைவிட 7 புள்ளிகள் முன்னிலையில் இருந்தார்.

ஆனால், இம்முறை 2 புள்ளிகள் மட்டுமே முன்னிலையில் உள்ளார். அகதிகள் பிரச்சினையை கையாளுவதில் ட்ரம்ப் அணுகுமுறை சிறப்பாக இருப்பதாக 48 சதவீதம் பேரும், கமலா ஹாரிஸுக்கு 33 சதவீதம் பேரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

# விண்ணிலிருந்து தீபாவளி வாழ்த்து தெரிவித்தார் சுனிதா வில்லியம்ஸ்



மெரிக்காவின் போயிங் நிறுவனம், நாசா விண்வெளி மையத்துடன் இணைந்து ஸ்டார்லைனர் என்ற விண்கலத்தை தயாரித்து உள்ளது. புதிய விண்கலத்தில் பயணம் செய்து, தரச்சான்று அளிக்கும் பொறுப்பு சுனிதா வில்லியம்ஸிடம் வழங்கப்பட்டது.

இதன்படி கடந்த ஜூன் 5 ஆம் திகதி போயிங் ஸ்டார்லைனர் விண்கலத்தில் சர்வதேச விண்வெளி மையத்துக்கு 8 நாள்கள் பயணமாக சுனிதா சென்றார். ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக கடந்த சில மாதங்களாக சர்வதேச விண்வெளி மையத்தில் சுனிதா தங்கியிருக்கிறார். அடுத்த ஆண்டு பெப்ரவரியில் ஸ்பேஸ் எக்ஸ் விண்கலம் மூலம் சுனிதாவை பூமிக்கு அழைத்து வர திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த சூழலில் இந்திய வம்சாவளியை சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் வெளியிட்ட காணொலியில்,

“அமெரிக்க ஜனாதிபதி மாளிகை மற்றும் உலகம் முழுவதும் தீபாவளியை கொண்டாடும் அனை வருக்கும் வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன். இந்த ஆண்டு பூமியில் இருந்து 260 மைல் தொலைவில் இருந்து தீபாவளியை கொண்டாடும் அரிய வாய்ப்பு எனக்கு கிடைத்துள்ளது.

எனது தந்தை தீபாவளி உள்ளிட்ட இந்திய பண்டிகைகளை எனக்கு எடுத்துரைத்து உள்ளார். இந்திய கலாச்சாரத்தோடு என்னை நெருக்கத்தில் வைத்திருந்தார். நன்மை, தீமையை வெற்றி கொண்ட நாளை தீபாவளியாக கொண்டாடுகிறோம். இது கொண்டாட்டத்தின் தருணம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி மாளிகையான, வெள்ளை மாளிகையில் கடந்த திங்கள்கிழமை தீபாவளி கொண்டாடப்பட்டது. இதில் 600 இந்திய வம்சாவளி அமெரிக்கர்கள் பங்கேற்றனர். விழாவில் ஜனாதிபதி ஜோ பைடன் பங்கேற்று உரையாற்றுகையில்,

“இந்திய வம்சாவளியை சேர்ந்த துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக இருக்கிறார். அவரால் தீபாவளி கொண்டாட்டத்தில் பங்கேற்க முடியவில்லை. அமெரிக்காவின் வளர்ச்சியில் இந்தியர்கள் முக்கிய பங்காற்றி வருகின்றனர். இதன்காரணமாகவே வெள்ளை மாளிகையில் தீபாவளி கொண்டாடப்படுகிறது.” – என்றார்.

பக்கங்கள் 03

கனடா முரசு

வியாழக்கிழமை 31/10/2024


## 50 ஆண்டுகளாக லொத்தர் சீட்டு வங்கியவருக்கு கிடைத்த பணப்பரிசு

கடந்த 50 ஆண்டுகளாக லொத்தர் சீட்டு கொள்வனவு செய்த நபர் ஒருவர் அண்மையில் பணப்பரிசு வென்றுள்ளார்.

கடந்த செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற 02



# சீக்கிய பிரிவினைவாதிகளை குறிவைத்து கனடாவில் வன்முறை

## அமித் ஷா மீது பகிரங்க குற்றச்சாட்டு

**கனடாவில் சீக்கிய பிரிவினைவாதிகளை குறிவைத்து வன்முறை, அச்சுறுத்தல் மற்றும் உளவுத்துறை தகவல்கள் சேகரிப்பு போன்ற நடவடிக்கைகளுக்கு இந்திய உள்துறை மந்திரி அமித் ஷா உத்தரவிட்டார் என கனடா வெளியுறவுத் துறை துணை அமைச்சர் டேவிட் மோரிசன் பகிரங்கமாக குற்றம்சாட்டி உள்ளார்.**

**அமித் ஷாவின் தொடர்பு பற்றி அமெரிக்காவின் வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகையிடம் உறுதி செய்த தகவலை, நாட்டின் பாதுகாப்பு குழுவின் உறுப்பினர்களிடம் மோரிசன் கூறியிருக்கிறார்.**

எனினும், அமித் ஷாவின் தொடர்பு பற்றி கனடாவுக்கு எப்படி தெரிய வந்தது? என்ற விவரத்தை மோரிசன் தெரிவிக்கவில்லை.

இதேபோல், வெளிநாட்டு மண்ணில் படுகொலைக்கான சதித்திட்டம் தீட்டியதாக இந்திய அதிகாரிகள் மீது அமெரிக்காவும் குற்றம்சாட்டியது.

நியூயோர்க் நகரில் வசிக்கும் சீக்கிய பிரிவினைவாத தலைவரைக் கொல்லும் சதித்திட்டம் முறியடிக்கப்பட்டதாக கூறப்படும் வழக்கில், இந்திய அரசாங்கம் மீது அண்மையில் அமெரிக்க நீதித்துறை குற்றம்சாட்டியது.

அமெரிக்க நீதித்துறையால் அறிவிக்கப்பட்ட இந்த வழக்கில், இந்தியாவிலிருந்து நியூயோர்க்கில் கொலை திட்டத்தை செயல்படுத்த கூலிப்படையை நியமித்தார் என இந்திய முன்னாள் உளவுத்துறை அதிகாரி விகாஸ் யாதவ் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

# யோக் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

கனடாவின் நோர்த் யோக் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

31 வயதான நபரே இவ்வாறு கொள்ளப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வார இறுதியில் வாகன தரிப்பிடம் ஒன்றில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

எனினும் அந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்து விட்டார் என வைத்தியசாலை அறிவித்துள்ளது.

இந்த சம்பவம் யோங் மற்றும் ஷெப்பர்ட் வீதிகளுக்கு அருகாமையில் இடம் பெற்றிருந்தது.

31 வயதான டெவன் பம்பல் என்ற டொரன்டோவை சேர்ந்தவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.



சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.







## 50 ஆண்டுகளாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லொத்தர் சீட்டு இலுப்பில் சிட்னி ஹுட் சின்சன் என்ற நபர் இவ்வாறு பணப்பரிசு வென்றுள்ளார்.

லொத்தர் சீட்டிலுப்பில் குறித்த நபருக்கு ஒரு லட்சம் டாலர்கள் பணப் பரிசு கிடைக்க பெற்றுள்ளது.

இந்த பணப்பரிசு வென்றெடுக்க கிட்டியமை பெரு மகிழ்ச்சியை அழைப் பதாக அவர் தெரிவித்துள்ளார்.




# கனடாவில் வீடுகளுக்கு தீ வைத்தனரென சிறுமி உள்ளிட்ட 4 பேர் மீது குற்றச்சாட்டு

கனடாவில் இடம் பெற்ற தீ விபத்து சம்பவம் ஒன்றின் சந்தேக நபர்களில் 12 வயதான சிறுமி ஒருவரும் உள்ளடங்குகின்றார் என தெரிவிக்கப்படுகிறது.

ஒஷோவா பகுதியில் வீடு ஒன்றில் அண்மையில் தீ விபத்து சம்பவம் ஏற்பட்டது.


இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் நான்கு பதின்ம வயதினருக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இவர்களில் ஒரு சிறுமி 12 வயதுடையவர் என்பதை குறிப்பிடத்தக்கது.

இந்த தீ விபத்து காரணமாக சில வீடுகள் சேதம் அடைந்துள்ளதாகவும் இதனால் சுமார் இரண்டு மில்லியன் டொலலர்கள் வரையில் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தீ விபத்து சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. திட்டமிட்ட அடிப்படையில் இந்த வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.






# ஒட்டாவாவில் இடம்பெற்ற கத்திக்குத்தில் ஒருவர் பலி!

ஒட்டாவா பகுதியில் இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஒட்டாவாவின் வானியர் பகுதியில் இந்த கத்தி குத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கத்திக்குத்து தாக்குதலுக்கு இலக்கான நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும் குறித்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் மேலதிக தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

ஒட்டோவா பொலிஸார் இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உயிரிழந்தவரின் ஆள் அடையாள விபரங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

இந்த ஆண்டில் ஒட்டோவாவில் இதுவரையில் 23 படுகொலை சம்பவங்கள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

